DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 219/2023

Miscellaneous :

Sessions : DW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அரவிந்தகிருஷ்ணன் |
| Father / Husband Name | சுப்புரமணியம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 10.04.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ICICI வங்கி மதுராந்தகம் கிளையில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எங்கள் கிளை மேலாளருக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது, அவர் வேறொரு வேலைக்காக சென்றுவிட்டதால் இந்த வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க அனுப்பினார். அழைப்பாணையில் கண்ட எங்கள் வங்கியின் சேமிப்பு கணக்கு எண். 155501500150 எதிரியால் பராமரிக்கப்பட்டு வந்தது என்றால் சரிதான். மேற்படி கணக்கு தற்போது செயல்பாட்டில் இல்லை, அந்த கணக்கு எந்த தேதியில் இருந்து செயல்பாட்டில் இல்லை என்றால் அந்த வங்கி கணக்கு எப்போதில் இருந்து செயல்பாட்டில் இல்லை என்ற தகவல் இல்லை. தோராயமாக 4-5 ஆண்டுகளாக செயல்பாட்டில் இல்லை.

2. இந்த வழக்கு காசோலையை நாங்கள் திருப்பவில்லை, புகார்தாரரின் வங்கி தான் திருப்பியது. எதிரியின் வங்கி கணக்கில் காசோலையில் கண்ட பணம் இல்லை என்று புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கிக்கு நாங்கள் தான் தகவல் கொடுத்தோம் என்றால் இல்லை. அழைப்பாணையில் கேட்க்கப்பட்டிருந்த எதிரியின் சேமிப்பு கணக்கின் Statement of Account கொண்டுவந்தேனா என்றால் இல்லை, எதிரியின் வங்கி கணக்கு செயல்பாட்டில் இல்லாத காரணத்தால் Statement of Account எடுக்க முடியாது.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

3. காசோலை எண்.009507 மற்றும் 009508 ஆகியவை எங்கள் வங்கியால் எதிரி நிர்மல்குமாருக்கு கொடுக்கப்பட்ட காசோலை என்றால் சரிதான்.